பிரணவ் தமிழியல் ஆய்விதழ்
ISSN:2582-9599

# பெண் வாழ்வியலும் பொருளாதாரம் அடக்கு முறைகளும்

**வ. தமிழ்செல்வி[1] & முனைவர் கோ.சுரேஷ்[2]**

**[1]முனைவர் பட்ட ஆய்வாளர், [2]இணைப்பேராசிரியர் & துறைத்தலைவர்**

**தமிழ்த்துறை, வி.எல்.பி. ஜானகியம்மாள் கலை அறிவியல் கல்லூரி,**

**கோவை . 641 042.**

**ஆய்வு நோக்கம்**

தற்காலத் தமிழ் எழுத்துலகம் பரந்துபட்டு காணப்படுகிறது. எண்ணற்ற படைப்பாளர்கள் புதிய புதிய படைப்புகளைப் படைத்து வருகின்றனர். மனித வாழ்க்கையைப் பற்றி யதார்த்தமான வகையில் இலக்கியம் படைப்பவர்கள் சிலரே. அந்த வரிசையில் திலகவதி, மலர்வதி, இலஷ்மி, இராஜம் கிருஷ்ணன் இவர்களும் மனித வாழ்க்கையை யதார்த்தமான வகையில் இலக்கியமாய்ப் படைத்துள்ளனர். சமுதாயத்தில் அழுத்தப்பட்ட பிரிவினரின் எழுச்சிகள் பெருகி வருகின்ற இக்காலத்தில் பெண் என்பவள் தன்னைத் தமது இருப்பின் ஆளுமையை உணர்ந்தவள் என்று உணரப்படாமலிருந்தது. அதன் முக்கியத்துவம் பலகாலம் அறியப்படாமலிருந்தது. அவ்வாறு ஒரு பெண் தனது ஆளுமையைத் தானே உணர முடியாத நிலையில் உணர்ந்தாலும் வெளிப்படுத்த முடியாத நிலையில் இந்தச் சமூகம் அவளைத் தனது கட்டுப்பாட்டில் வைத்திருக்கிறது. பெண் என்பவள் தன்னுடைய திறமைக்கு ஏற்ப செயல்பட மறுக்கிறது. சமூகத்தில் நிலவி வரும் மரபு சார்ந்த கருத்தியல்களை மாற்றுவதனால் மட்டுமே பெண் ஆணுக்கு இணையான உரிமைகளைப் பெற முடியும். எனவேஇ சாகித்திய அகாடமி விருது பெற்ற பெண் படைப்பாளர்களின் படைப்புகளில் பெண்களின் நிலை குறித்து இக்கட்டுரை ஆராய்கின்றது.

**ஆய்வுச்சுருக்கம்**

பெண் சமூகத்தில் எம்மாதிரியாக நடத்தப்படுகிறாள் என்பதையும் பெண்ணிற்கு இழைக்கப்படும் அநீதிகள், பாலியல் துன்புறுத்தல்கள் குடும்ப வன்முறைகள் என்பதையெல்லாம் புரிந்து கொண்டால் தான் நம்மால் அதற்கானத் தீர்வை எட்ட முடியும். தீர்வுகள் இருக்கிறது. ஆனால் அதனை ஏற்கும் மனநிலைதான் இல்லை. எனவே, பெண்களுக்கு இழைக்கப்படும் இம்மாதிரியான நிலைகளை எடுத்துரைக்கும் வண்ணமாக நவீனமான கவிதைகள், சிறுகதைகள், புதினங்கள் இருக்கின்றது. இதன் மூலம் பெண்களின் அடிமைத்தனம் எடுத்துரைக்கப்படுகிறது என்பது வரவேற்கத்தக்கது. பெண்ணடிமைத்தனத்தைப் பாரதியார் பாடுவதற்கு முன்பு பேசுவதற்கு முன்பு பெண்ணிற்கான உரிமைகளை யாரும் பாடவும் இல்லை. பேசவும் இல்லை. பாரதியாருக்குப் பின்பு வந்த தற்கால எழுத்தாளர்கள் சிறுகதைகள்,

நாவல்கள், கவிதைகள் மூலம் பெண்களின் வேதனையை, துயரத்தை, கொடூரங்களின் உண்மை நிலைகளை வெளிச்சத்திற்கு கொண்டு வந்து காட்டுகின்றனர்.

படைப்பாளர்கள், எழுத்தாளர்கள், தங்களின் வாழ்வியல் எதார்த்தங்களைப் புரிந்து பெண்களின் நிலை உயர பெண்கள் படும் வேதனையை தங்கள் தங்கள் படைப்புகளின் வழியே எடுத்துரைத்து வருகின்றனர். தற்கால எழுத்துலகில் எண்ணற்ற படைப்பாளர்கள் தங்களின் வாழ்வியலில் புரிந்து கொண்டு தெரிந்து கொண்டவற்றை எளிமையாக சிறுகதைகளாக புதினங்களாக படைத்து வருகின்றனர்.

**முன்னுரை**

படைப்புகள் தமிழில் தோன்றியுள்ளது பெண்ணியச் சிந்தனைகளையும்,கருத்தாடல்களையும் தன்னகத்தே கொண்ட படைப்புகள் ஒரு தனித்த தன்மையைப் பெற்றுள்ளது. காரணம் பெண்களுக்கு ஆண்டாண்டு காலம் வழங்கப்பட வேண்டிய நியாயங்கள், தீர்ப்புகள், தீர்வுகள் ஆகியவை கிடைக்கச் செய்யும் காலமாக நவீன காலம் இருப்பதால் அத்தகையப் பெண்ணியச் சிந்தனைகள் முக்கியத்துவம் பெறுகிறது. இந்தப் பெண்ணியம் குறித்து புரிதல் இல்லாமல் வாழும், வாழ்ந்த வாழ்ந்து வரும் ஆண்களுக்கு நிகராகவே பெண்களும் இருக்கின்றனர்.

பெண்ணின் முன்னேற்றத்திற்குப் பெரும் தடையாக இருப்பது பெண்ணே என நாம் அறியும் போது நம்மில் கோபமும் வருத்தமும் தோன்றுவதை யாராலும் மறக்க முடியாது. போதாத குறைக்கு பெண்களுக்கு சுதந்திரம் எதற்கு? பெண்ணியம் ஏன் பேச வேண்டும்? அவ்வாறு பேசினால் யாருக்கு என்ன கிடைக்கும்? என எதிர் கேள்வி கேட்டு வெறுக்கும் மாதர் குலமும் நம்மிடையே வாழ்ந்துதான் வருகின்றனர். இத்தகைய நவீனச் சூழலில் பல படைப்புகளைப் படைப்புகளின் வழி வெளிப்படுத்துகிறார்கள்.

**திறவுச் சொற்கள்:-** பெண் வாழ்வியல், வரதட்சணை, ஆணாதிக்கம், பெண்களுக்கான தடைகள்

**பெண் வாழ்வியல்**

சாகித்ய அகாதமி விருது பெற்ற வேருக்கு நீர்இ ஒரு காவேரியைப் போல தூப்புக்காரி, கல்மரம் போன்ற புதினங்களை வாசிக்கும் போது வாசகர்களுக்கு வாழ்வில் பெண்கள் படும் துயரங்களை உணரச் செய்கிறது. இப்படைப்புகள் விளிம்பு நிலை மக்களின் வாழ்வியலை வாசிப்பவர்களுக்கு படம் பிடித்துக் காட்டுகிறது.

புதினங்களில் கதை மாந்தர்களின் உரையாடல்களின் வழியே படைப்பாளர் பேசுவதாக அமைக்கப்பட்ட மொழி நடை சிறப்பு எனலாம். எளிய நடையில் பாமரர்கள் புரிந்து கொள்ளும் வகையில் அமைந்த இப்புதினங்கள் அனைவரையும் கவர்ந்திழுக்கும் யதார்த்தமான வாழ்வியலில் நிகழ்வுகளைக் கதைகளாக்கிக் காட்டியுள்ளனர். தாம் நேரில் கண்டு கேட்ட நிகழ்வுகளை எளிமையான வழியில்

புதினங்களாகப் படைத்தளித்துள்ளனர். பெண்களில் வாழ்வியலில் அவர்கள் படுகின்ற இன்னல்களை சிக்கல்களைப் பதிவு செய்துள்ளனர்.

**வரதட்சணை**

வரதட்சணை என்பது வெளிப்படையான சமூகச் சிக்கல் எனலாம். அனைவராலும் ஏற்றுக் கொள்ளப்படுகிறது என்பதற்காக இது சமூகத்திற்கு நன்மை பயக்கிறது எனக் கூற முடியாது. இந்தப் பிரச்சனையும் கொலை செய்தல், தன்னுயிரை தானே போக்கிக் கொள்ளுதல் போன்ற வரம்பு மீறிய செயல்களை உள்ளடக்கியதாக வரதட்சணையைக் காணலாம்.

வரதட்சணை எனும் கொடிய நோயால் பல பெண்களின் வாழ்க்கை நரகமாகிப் போகின்றது. வரதட்சனை கொடுக்க முடியாத நிலையில் பல பெண்கள் மணமகன் வீட்டாரின் கொடுமையால் பாதிக்கப்படும் நிலை தொடர்ந்து வருகிறது. இந்த வரதட்சனைக் கொடுமையினால் பல பெண்கள் தற்கொலை செய்து கொள்தல், கொலை செய்யப்படுதல்இ பிறந்த வீட்டிற்குத் துரத்தப்படுதல் போன்ற பல்வேறு நிகழ்வுகள் நடைபெறுகின்றன.

வரதட்சணையால் சிசுக்கொலை அதிகரித்து வருகின்றன. இவ்வாறான வரதட்சணைக் கொடுமையால் 8000க்கும் மேற்பட்ட பெண்கள் பலியாகியுள்ளனர். வரதட்சணை வன்முறையை உருவாக்குகிறது என்பது மிகத் தெளிவாக உள்ளது. வரதட்சணை காரணமாக ஆண்கள் பெண்களை விட இச்சமூகத்தில் உயர்ந்தவர்களாகவே கருதப்படுகிறார்கள்.

வரதட்சணைக் கொடுமை நமது நாட்டில் பரவியுள்ள பெரு நோய்களுள் ஒன்றாகும். இந்நோய்க்குப் பெரிதும் பலியாவது பெண்களும் பெண்களைப் பெற்ற பெற்றோர்களுமே ஆவார்கள். வரதட்சணை வாங்குவதும் கொடுப்பதும் சட்டப்படி குற்றமாகக் கருதப்பட்டாலும் நம் சமூகத்தில் வரதட்சனை என்னும் நோய் வேரூன்றி உள்ளதை நம்மால் மறக்க முடியாது.

திருமணங்கள் சொர்க்கத்தில் நீ ஜெயிக்கப்படுகின்றது என்ற நிலை மாறி பணத்திற்காக நிச்சயிக்கப்படுகின்ற தன்மையைக் கண்கூடாக்க் காணமுடிகின்றது. மணக்கொடை குறித்துப் பக்தவச்சல பாரதி,

> “மணத்திற்கு முன்போ அல்லது பின்போ மணமக்கள்
> ஒருவருக்கொருவர் அன்பளிப்பு போன்றவை பரிமாறிக்
> கொள்ளும் வழக்கம் உலக சமுதாயங்களில் பரவலாகக்
> காணப்படுகின்றது. அவ்வகை வழக்காறுகளாக
> மணப்பெண்ணுக்குப் பணம் கொடுத்தல் ((Bride Price))
> (Dowry) அன்பளிப்புப் பரிமாற்றம்இ மணக்கொடை
> (Gift exchange) மணப்பெண் வீட்டிற்குப்

பணி செய்தல் (Switot Service) போன்றன

அமைகின்றன."[1]

என்று குறிப்பிடுகின்றார். திருமணம் நடைபெறப் போகும் பெண்ணிற்கு அப்பெண்ணின் பெற்றோர் தங்கள் சக்திக்கு உட்பட்டுத் தாங்களாகவே முன்வந்து செய்வது ஸ்ரீதனம் அல்லது சீதனம். ஆனால் மாப்பிள்ளை வீட்டார் பெண் வீட்டாரிடம் கட்டாயப்படுத்தி வசூலிப்பது வரதட்சணை ஆகும். இத்தகை வரதட்சணையால் பல பெண்களின் வாழ்க்கை சீர்குலைந்து போகின்ற நிலை ஏற்படுகின்றது.

தூப்புக்காரி புதினத்தில் கனகம் மருத்துவமனையில் துப்புரவுத் தொழிலாளி வேலை செய்து தம்முடைய ஒரே மகளையும் வளர்க்கின்றாள். சமூகத்தில் உயர் சாதி வகுப்பினைச் சார்ந்த போதிலும் வறுமையின் காரணமாக கீழ்சாதியினரின் தொழிலினை கனகம் செய்து வருவதால் அவளின் மகளை வரதட்சணை காரணமாகவும் திருமணம் செய்ய யாரும் முன் வருவதில்லை என்பதனை அறிந்த கனகம் தன் மகளின் திருமணம் வரதட்சணை இன்றி எவ்வாறு நடைபெற இயலும் என்பதனை எண்ணிப் பார்க்கின்றாள். இதனை,

"இப்ப இருக்கிற பவுனு விலையில் ஒரு கலியாணம் எடுக்கிறதை நெனச்சிக் கூட பாக்க முடியேல."(தூப்:ப:30)

என்று கனகம் எண்ணுகின்றாள். கனகம் உடன் பணிபுரிகின்ற வேலப்பன் கனகத்திடம் பூவரசிக்கு வரன் எதுவும் பார்க்கவில்லையா? திருமணம் செய்து வைக்கவில்லையா? என்று கேட்டான். அதற்கும் கனகம் வரதட்சணையினையே காரணமாகக் கூறுவதனை,

அவளுக்கு சம்மந்தம் ஒண்ணும் பாக்கேலியா?" பாக்கணும் வாறவன் அஞ்சி, பத்து லெட்சம் இல்லியான்னு கேட்கியான். எனட்ட அப்படி என்னல இருக்கு? அவ கழுத்துல ரெண்டு பவுன் மாலை கெடக்கு. ஒரு லெட்சம் ரூபாயிக்கு சீட்டும் நடக்குது. இம்படந்தான் அவளுக்குள்ள சீதனம்" (தூப்:ப:31)

என்ற வரிகள் மூலம் அறிய முடிகின்றது.

திலகவதியின் கல்மரம் புதினத்தில் ஆதிலெட்சுமி எனும் பாத்திரம் தன் மகளை திருமணம் செய்து கொடுப்பதற்காக கடன் வாங்கி அவதிப்படும் நிலையினை அறிய முடிகின்றது. ஏனெனில் பெண் பிள்ளை என்றாலே வரதட்சணைக் கொடுத்து திருமணம் செய்து வைக்க வேண்டும் என்பது கட்டாயமான ஒன்றாகும். இந்நிலையில் தன் மகளின் திருமணத்தை கடன் வாங்கி செய்து வைக்கும் நிலையின் மூலம் வரதட்சணையின் கொடூர நிலையை அறிய முடிகின்றது. இதனை,

"இப்படி ஒம்பொண்ணு அவங்கயிலே பேசிக்குனு நின்னா, இவங்கயில பேசிக்குனு நின்னான்னு ஒரு சொல் வந்துடக் கூடாதுன்னு தான் கடன ஒடன வாங்கி ஒங்கக்காள அத்தினி சுருக்கா கட்டிக் கொடுத்தது" (க.ம.ப.37)

என்று ஆதிலெட்சுமி கூறுவது தாயின் கடமை பெண்ணைத் திருமணம் செய்து கொடுப்பது அப்படித் திருமணம் செய்து கொடுத்தால் தன் கடமை முடிகிறது என்றும் அதற்கு மேல் வேறு சிக்கல்கள் இல்லை என்றும் நினைக்கின்ற நிலை குடும்பத்தில் உள்ளது. இது பெண்களுக்குச் சிக்கல்களை ஏற்படுத்தும் காரணியாக இருப்பதை உணர முடிகிறது .

**ஆணாதிக்கம்**

பெண் என்பவள் ஆணுக்குக் கட்டுப்பட்டவளாகவும் அடங்கியவளாகவுமே சமுதாயம் கருதுகின்றது. கணவன் எனப்படும் ஆண் முறைகேடான, ஒழுக்கக் கேடான வாழ்க்கைக்கு உரியவன் எனினும் அவனது மனைவி அதனை ஆணின் ஒழுக்கமாக எண்ணிப் பெரிதுபடுத்தக் கூடாது அவனுக்கு அவனது தவறுகளையும் சுட்டிக் காட்டக் கூடாது. அதனை எதிரொலிக்கும் எச்செயலையும் செய்யக் கூடாது. இத்தகைய நிலையே பெண்களுக்கான சமுதாய உணர்வாக உள்ளது

ஆண் மயமான சமூகம் பெண்ணுக்கான அறிவு வளர்ச்சியைக் கட்டுப்படுத்த பல தந்திரங்களைக் கையாண்டுள்ளது. இளமைஇ மனம்இ கற்புக் கோட்பாடு, தாய்மையைக் கொண்டாடுவது குழந்தைப் பேறு என்று பெண்களுக்குக் கற்பிக்கப்பட்ட வாழ்க்கை முறை அவர்களின் அறிவு வளர்ச்சிக்குத் தடையாக அமைந்தது. குடும்பம் என்ற நிறுவனத்திலிருந்து பிரித்தறிய முடியாத ஒரு நிலையில் தான் அவரது வாழ்வு வடிவமைக்கப்பட்டுள்ளது. ஒரு தந்தை வழிச் சமூகத்தில் பெண்ணின் அடையாளம் என்பது ஆனால் புனையப்பட்ட ஒன்றுதான் என்பர் பெண்ணியவாதிகள். தற்காலத்தில் பெண்களுக்கு இரண்டாந்தர குடிமகள் என்ற நிலையே தரப்படுகிறது. பெண்ணை நுகர்வுப் பொருளாக நினைக்கும் ஆண், தன் விருப்பம் போலவே இருக்க வேண்டும் என எண்ணுகிறான்.

திருமணத்திற்குப் பிறகு கணவனுடன் வாழ்கிற இல்வாழ்க்கையில் கூட்டுக் குடும்பமாயினும் தனிக்குடும்பமாயினும் நகரப் பின்னணி, கிராம வாழ்க்கை, முன்னேறிய இனம் பின் தங்கிய இனம் படித்து அலுவல் புரியும் பெண் வீட்டில் இருக்கும் பெண் என்ற பல்வேறு நிலைகளிலும் வெவ்வேறு விதமான சிக்கல்கள் பெண்ணுக்கு ஏற்படுகின்றன.

வேருக்கு நீர் புதினத்தில் சுதீர் ஆண் என்பதனால் சுதந்திரமாக வளர்க்கப்பட்டவன். அதே நிலையில் யமுனா பெண் என்பதால் கட்டுக்கோப்புடன் வளர்க்கப்பட்டவள் என்ற சமூகக் கட்டமைப்பின் மூலம் பிறப்பிலேயே பெண்ணடிமைத்தனமும் ஆணாதிக்கமும் மேலோங்கி நிற்பதனை,

"உண்மையில் சுதீர்தான் சுதந்திர வெளியிலே உருவானவன். அவளோ சட்ட திட்டங்களுள் வளர்ந்த பறவை தான்." (வே.நீ.பக்: 83)

என்று கூறுவதன் வாயிலாக அறிய முடிகின்றது.

**பெண்களுக்கான தடைகள்**

சமுதாயத்தில் பெண்களுக்கானத் தடைகள் அவர்கள் பிறக்கும் போதே தொடங்கி விடுகிறது. பெண் குழந்தை என்றதுமே சமுதாயம் மாறுபட்ட கண் கொண்டுப் பார்க்கத் தொடங்குகின்றது. பெண் குழந்தைகளுக்காகவே தனியான விளையாட்டுப் பொருட்கள் பொழுதுபோக்குகள்இ உடைகள் என பல நிலையினும் வேறுபடுத்திப் பெண்ணை ஒரு வட்டத்திற்குள் வாழ்வதற்குப் பயிற்சி அளிக்கப்படுகின்றது.

பெண் குழந்தைகளுக்குக் கல்வி அறிமுகப்படுத்துவதற்கு முன்னரே சமையல் கலையை அறிமுகப்படுத்திச் சமையல்காரியாகவே வாழும் நிலையைச் சமுதாயம் நிர்பந்தப்படுத்தி விடுகிறது. பெண்களுக்கான பிரச்சனைகளுக்கும் தடைகளுக்கும் பெண்களே பல்வேறு காரணமாய் அமைகின்றனர் எனலாம். பெண் தன்னை உடல் ரீதியாகவும்இ மனரீதியாகவும் பலவீனமாக கருதுவது. பண்பாடு என்ற பெயரில் போராட மறுப்பது. எப்போதும் தான் ஒரு சார்பு உயிரி என நினைத்துப் போராட மறுப்பது. சமூக பழக்க வழக்க சட்டங்களை மீறினால் தவறு ஏற்படும் என எண்ணுதல் அல்லது தண்டிக்கப்படுவோம் என பயப்படுதல். கலாச்சாரத்தோடு ஒன்று ஒதுக்கியே நிற்றல். தனித்து வாழ முடியும் என நம்ப மறுப்பது. வன் கொடுமைக்கு எதிராகக் குரல் கொடுக்க, போராட மறுப்பதுஇ மற்ற பெண்களுக்கு வன்கொடுமை நிகழும் போது ஒதுங்கி நிற்றல். தற்காப்பு கலைகளில் உடல் ரீதியாகவும் மனரீதியாகவும் தயாராகாமல் இருப்பது. பெண்ணின ஒற்றுமையின்மைஇ இயக்க ரீதியாக பெண்கள் இணையாமை. கல்வி நிலையில் தன்னை உயர்த்தாமல் குடும்ப உறவுகளிலேயே மூழ்கி விடுவது. என பெண்ணிய பிரச்சினைகளுக்கான காரணங்கள் நீள்கின்றன. மேற்கண்ட பிரச்சனைகளை உற்று நோக்கும் போது பெண்ணிய பிரச்சனைகளுக்கு ஆண் மட்டும் ஒரு முக்கிய காரணியல்ல. பெண்ணும் ஒரு முக்கிய காரணியாக இருக்கிறாள் என எண்ணத் தோன்றுகிறது. கல்வி பெண்ணினத்திற்கு அவசியம் என்பதையும் அதுதான் அவளது அனைத்து பிரச்சனைகளுக்கும் நல்ல தீர்வைத் தரும் என்பதனை கவிஞர் மித்ரா,

“நாட்டை! வீட்டை! நானிலத்தை!
நடத்திட நற்கல்வி மிக வேண்டும்
பெண்கட்கு!
அவர்கள் கற்காமல் களர்நிலமாய்! பாழ்
நிலமாய்!
முக்காலும் இருப்பதை எக்காலும் வெறுத்தவரே!
பொதுவுடமை உலகமைக்க ஆண்களோடு

பெண்களும்

ஒதுங்காமல் ஓரணியில் இணையுமாறு அன்றே

ஆணையிட்ட பாவேந்தே அன்னை மண்

உள்ள வரை

உன்னைப் பெண்ணுலகம் மறவாதே!”[2]

இவ்வாறு பெண்களே பல பிரச்சனைகளுக்கு காரணமாய் அமைகின்றனர்.

ஒரு காவேரியைப் போல புதினத்தில் காவேரியின் பெரிய அண்ணனின் மனைவி சவுந்தரி உடல்நலக் குறைவால் படுக்கையில் விழுந்தாள். இந்நிலையில் சின்ன அண்ணனின் மனைவி யசோதா சவுந்தரிக்கு உதவி செய்யாமல் அவளைத் துன்பப்படுத்தினாள். அதுமட்டுமின்றி காவேரியையும் துன்பப்படுத்தினாள். இதனைஇ

“ஓரகத்தியைப் புழுவாக மதித்து உதாசீனப்படுத்தினாள். நாத்தனார் காவேரியை அவளுக்கு கட்டோடு பிடிக்கவில்லை. எவனையாவது கட்டிக் கொண்டு வீட்டை விட்டுக் கிளம்ப மாட்டாளோ இந்த மகராசி நமக்குப் பெரும் விலங்காகஇ கழுத்திலே ஏற்றி விட்ட கல்போல.... என்று பலமுறை காவேரியின் காதுபடத் தன் கணவனிடம் கடுத்துக் கொண்டிருந்தாள்” (ஒ.கா.போ.பக்: 81)

**முடிவுரை**

சமுதாயத்தில் உள்ள மரபு சார்ந்த காரணிகள் பெண்களின் நலனைக் கொன்றழிக்கும் செய்திகள் போன்றவை சாகித்திய அகாதமி விருது பெற்ற பெண் எழுத்தாளர்களின் புதினங்களில் இடம் பெறுகின்றன. சமுதாயத்தில் இருந்து வரும் ஆண் மேலாதிக்கமே பெண்களை அடிமைப்படுத்துகின்றது என்பதைத் தெளிவுபடுத்துவதை புதினங்களில் அறிய முடிகின்றது. பெண் தன் வாழ்வின் ஒவ்வொரு நிலையிலும் ஆணைச் சார்ந்தே வாழ்கிறாள். பெண்கள் இன்றளவும் அடிமைத்தனங்களில் சிக்குண்டு தவிப்பதை நாம் காண முடிகிறது. இதற்கு காரணம் சமூகத்தில் அவளுக்கான உரிமைகளும் சுதந்திரம் இல்லாமையே ஆகும். பெண்கள் ஆண்களுக்குத் துணையாகவும் பக்கபலமாகவும் இருக்கின்றனர். அதே நேரத்தில் ஆண்களால் வரும் பிரச்சினைகளுக்குப் போராடுவதாகவும் நாவல்களில் காண முடிகிறது. பிறரைச் சார்ந்து வாழும் நிலையிலிருந்து மேம்பாடு அடைவும் வாழ்க்கையைச் சிறப்பாக அமைத்துக் கொள்ளவும் பெண்கல்வி உறுதுணை செய்கின்றது. பெண்ணின் குணநலன்களை அறிந்து திருமணம் பேசாமல் பெண் வழி வரும் பொருள் அறிந்து மணம் முடிக்க விரும்பும் நிலையினால் பெண்ணின் திருமணம் தடைபடுவதோடு பெற்றோர் பெண் பிறப்பை விரும்பாத அளவுக்கு வரதட்சணைக் கொடுமை பெண்களை பிடித்திருக்கும் தீவிர நோயாக உள்ளன. பெண் என்றால் இயல்பாகவே ஒடுக்குதலும் பாலியல் ரீதியாக துன்புறுத்தப்படுகின்ற நிலையினையும் நாவல் வழி அறிய முடிகின்றது.

**துணைநின்ற நூல்கள்**

1. இரா. பிரேமா - பெண் விடுதலையும் பெண்ணுரிமையும் - பக்.48-49
2. மித்ரா - காற்றின் சிறகுகள் ப.67
3. சாகித்திய அகாதெமி விருது பெற்ற இராஜம் கிருஷ்ணன் - வேருக்கு நீர்
4. சாகித்திய அகாதெமி விருது பெற்ற மலர்வதி – தூப்புகாரி
5. சாகித்திய அகாதெமி விருது பெற்ற திலகவதி – கல்மரம்
6. சாகித்திய அகாதெமி விருது பெற்ற இலஷ்மியின் ஒரு -காவேரியைப் போல